**தலைப்பு 252 -தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 18 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1. கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு தொடர்பான இணக்கும் கூற்றுக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மரணித்த 04 உத்தியோகத்தர்கள் தொடர்பிலான கடன் மீதி கூட்டுத்தொகை மொத்தம் ரூபா 379,856 ஆகும். மேற்குறிப்பிட்ட நிலுவை தொகையில் ரூபா 221,206 மீள அறவிடப்பட்டிருந்தது. | நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கு காரணமாக 2018 இல் மரணித்த உத்தியோகத்தரிடமிருந்தான கடன் மீள அறவீடு கால தாமதமாகியது. 2022 பெப்ரவரி 25 ஆம் திகதியன்று தொடர்புடைய | அரச நிதி திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட வழிகாட்டியின் இல. 01 (ஆ) இன் பிரகாரம், நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டில் மரணித்த உத்தியோகத்தர் ஒருவரின் கடன் நிலுவை மீதியான ரூபா 65,900 தொடர்புடைய மரணித்தோர் பணிக்கொடையிலிருந்து மீள அறவிடப்படல் வேண்டும் மற்றும் இது 2018 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட மீள அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதிகாரியின் மனைவி ஓய்வூதிய திணைக்களத்திடமிருந்து மரணித்தோர் பணிக்கொடையினை கோரி விண்ணப்பித்துள்ளார். அதன் காரணமாக பணிக்கொடையிலிருந்து நிலுவையான கடன் மீதியினை மீள அறவீடு செய்ய முடியும். | எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 1991 முதல் 2017 ஆம் ஆண்டு வரை சேவையை விட்டு விலகிய 11 உத்தியோகத்தர்கள் தொடர்பிலான கடன் மீதியின் கூட்டுத்தொகை மொத்தம் ரூபா 524,261 நிலுவையாக காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட கடனை மீள அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | கடன் மீதி ரூபா 95,140 தொகையினை மீள அறவீடு செய்வதற்கான நீதிமன்ற விசாரணை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் உள்ளது. ரூபா 168,664 தொகையான 4 கடன் மீதிகளை மீள அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ரூபா 226,805 தொகையான 4 கடன்பட்டோர்களின் முகவரகளை அடையாளம் காண்பதற்கு பிரதேச செயலகங்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ரூபா 27,080 தொகையான கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு கடன் உத்தரவாததாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் ரூபா 6,572 தொகையான கடன் மீதியில் ரூபா 2,159 தொகை மேலும் அறவிட வேண்டிய மீதியுடன் ரூபா 4,414 தொகை மீள அறவிடப்பட்டுள்ளது. | அரச நிதி திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட வழிகாட்டியின் இல. 01 (ஆ) இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 592,561 தொகையொன்றினை 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்குள் மீள அறவீடு செய்வதற்கு தவறியிருந்தது மற்றும் 2022 ஆம் ஆண்டில் அத்தொகையில் ரூபா 509,771 மீள அறவீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 82,790 கடன் மீதி தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடையினை தயாரிப்பதுடன் தொடர்பான ஆவணங்கள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஓய்வூதிய பணிக்கொடை வழங்கப்பட்டதள் பின்னர் தீர்ப்பனவுகள் இடம்பெற முடியும். ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவின் காலதாமதத்தினால் இது தொடர்பில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு 2022 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | அரச நிதி திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட வழிகாட்டியின் இல. 01 (ஆ) இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி ஒழுங்கு விதிகள் 770(2) இன் பிரகாரம், அகற்றலுக்கு தேவையான கட்டளைகளை பெற்றுக் கொள்ளாமல் நிதியல்லா சொத்துக்களின் SA-82 அறிக்கையிலிருந்து ரூபா 207,683 பெறுமதியான சொத்துக்கள் பதிவழிக்கப்பட்டிருந்தன. | பொருள் கணப்பீட்டு சபையின் பரிந்துரைகளின் பிரகாரமும், அகற்றுதலுடன் தொடர்புடைய கட்டளையில் (அகற்றல் - ஈ) பிரகாரமும் மற்றும் அதற்கு என்னால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரமும் பொருட்கள் 2021 நவம்பர் 29 திகதியன்று அழிக்கப்பட்டன. ஆகையினால் நிதியல்லா சொத்துக்களின் அறிக்கை SA-82 இலிருந்து ஒரு விலக்கொன்றாக குறிப்பிடப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் பொருள் கணிப்பீடு தற்போது நிறைவடைந்துள்ளது மற்றும் அதே நேரத்தில் அகற்றல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் கணிப்பீட்டில் விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட ரூபா 1,907,417 பெறுமதியான சொத்துக்கள் நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த நிதியல்லா சொத்துக்களில் இருந்து விற்பனையாக பதிவழித்தல் செய்யப்பட்டிருந்தன. ஆனால் குறித்த சொத்துக்கள் 2022 மார்ச் 25 ஆந் திகதியன்றிலும் கூட விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொருள் கணிப்பீட்டுடன் தொடர்புடைய பொது – 47 படிவத்தின் பரிந்துரைகளின் பிரகாரம், S (விற்பனை) என குறிப்பிடப்பட்ட பொருட்களின் விற்பனைக்காக 5 நிறுவனங்களிடம் இருந்து விலை கோரப்பட்டது மற்றும் ஒரு நிறுவனத்தினால் மட்டும் விலைகள் வழங்கப்பட்டன. அந்த விலைகள் போதியளவாக இல்லாமையினால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் விலைகளுக்கு இணங்கினால் அரசுக்கு நட்டம் ஏற்படும் என்பதன் காரணமாகவே விற்பனை மேற்கொள்ளப்படவில்லை. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொருள் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட பொது 47 படிவத்தில் விற்பனையாக குறிப்பிடப்பட்ட பொருட்களுடன் அந்த பொருட்கள் விற்பனைக்காக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. | 2021 நவம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட 03/2021 ஆம் இலக்க பொது கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது திணைக்களத்திற்கு இரண்டு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தொகையானது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 5,457,819 மொத்த பெறுமதியுடைய 12 Dell மடிக்கணனிகள், 55 Tab கணனிகள், 02 லேசர் பிரின்டர்ஸ், ஒரு டொட் மெட்ரிக் பிரிண்டர், 04 மேசைக் கணனிகள் மற்றும் ஒரு கலர் பிரிண்டர் ஆகும். அந்த சொத்துக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | நன்கொடைகளின் கீழ் பதிவு செய்வதற்கு அவசியமான தேவையான தகவல்களின் பற்றாக்குறை காரணமாக 2018 முதல் 2021 வரையான காலப்பகுதியின் போது 55 Tab கணனிகள், 12 மடிக்கணனிகள், 04 Note Book கணனிகள் மற்றும் 01 கலர் பிரிண்டர்களினை பதிவு செய்ய முடியாதிருந்தது மற்றும் 2022 ஆம் ஆண்டில் இந்த சொத்துக்களுடன் தொடர்புடைய தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன மற்றும் 70 சம்சுங் கலாக்ஸி Tab , 10 Thinkpad மடிக்கணனிகள் மற்றும் 10 | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம், கிடைக்கப்பெற்ற நன்கொடைகள் தொடர்பில் அவற்றினை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, அந்த இரண்டு நிறுவனங்களால் குறித்த காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட 70 சம்சுங் கலாக்ஸி Tab கணனிகள், 10 Thinkpad மடிக்கணனிகள் மற்றும் 10 Wifi ரவுட்டர்ஸ் என்பவற்றின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | Wifi ரவுட்டர்ஸ் மாதிரி கணிப்பீடு பிரிவிற்கு வெளிநாட்டு மானியமாக கிடைக்கப்பெற்றிருந்தன. ஆனால் இந்த பொருட்களினை வழங்கிய நாட்டினால் அந்த பொருட்களின் பெறுமதி விபரங்கள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டுக் குழுவொன்று அவற்றின் விலையினை மதிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது. குழு விரைவாக பொருட்களினை மதிப்பீடு செய்து CIGAS இல் பதிவுசெய்வதற்கு அவற்றினை வழங்கும். CIGAS இல் பதிவு செய்ததற்கு பின்னர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு அனுமதிக்கப்படும். | |

**(இ) கட்டுநிதி மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 நவம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம், ஏனைய வருமான கணக்கு உத்தியோகத்தர்கள் சார்பாக திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தினை நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்க கூடாது மற்றும் அது கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக ஏனைய கணக்கு உத்தியோகத்தர்கள் சார்பாக சேகரிக்கப்பட்ட ரூபா 55,214,269 தொகையொன்று நிதி | இந்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் மற்றும் கடன் வட்டி வருமானம் என்பன ஏனைய வருமான கணக்கு உத்தியோகத்தர்கள் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானமாக கருதப்பட்டிருக்கவில்லை. | 2021 நவம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றுகை கூற்றில் பிரதான பேரேட்டில் பெறுகைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது மற்றும் கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி செயலாற்றுகை கூற்றில் ரூபா 55,214,269 தொகை மிகையாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | அரச கணக்கு திணைக்களத்தின் வழிகாட்டல்களின் 7.5 ஆம் பந்தியின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி செயலாற்றுகை கூற்றில் உள்ள மீதியானது கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் உள்ள மீதியடன் சமமாக இருக்க வேண்டும். கட்டுநிதி கணக்கிணக்க கூற்றிலிருந்து நேர்மறை (+) ரூபா. 23,937,125, எதிர்மறை (-) ரூபா. 23,937,125 இனை கூட்டி நிதி செயலாற்றுகை கூற்றிலுள்ள மீதியினை சீராக்கியதன் பின்னரான 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி பூச்சியம் ஆகும். ஆனால் நிதி செயலாற்றுகை கூற்றில் ரூபா 1,486,732 கட்டுநிதி மீதியாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டிறுதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட காசு மீதி கட்டுநிதி மீதியாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | 2021 நவம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் 7.5 ஆம் பந்தியின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2021 ஆம் ஆண்டின் நிதி செயலாற்றுகை கூற்றின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 23,937,125 (-) எதிர்மறையான தொகையாக இருந்தது. திருத்தியமைக்கப்பட்ட கட்டுநிதி கணக்கிணக்க கூற்றின் வடிவம் ACA-7 இன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட கட்டுநிதி மீதி ரூபா 23,937,125 (-) எதிர்மறையாக இருந்தது. நிதி செயலாற்றுகை கூற்றில் அந்த மீதியினை சீராக்குகையில் அது ரூபா 47,874,250 (-) | சரியான வடிவமானது தவறுதலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட SA/MAA/02/01/01 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தர்க்க ரீதியாக தயாரிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| எதிர்மறையான தொகையாக இருந்தது. கட்டுநிதி சீராக்கம் ரூபா 23,937,125 (+) சாதகமான மீதியொன்றாக இருக்க வேண்டுமென்ற போதிலும், அது திருத்தியமைக்கப்பட்ட ACA-7 வடிவத்தில் துல்லியமாக குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. நிதி செயலாற்றுகை கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட குறிப்புக்களின் பிரகாரம், கட்டுநிதி கணக்கின் மீதியானது தர்க்க ரீதியாக பூச்சிய பெறுமதியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1. முகாமைத்துவ செலவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதிக்குள் ஐந்து விடயங்களுக்காக ரூபா 93,090,000 ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. முழு ஏற்பாடும் எவ்வித நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், மூலதனச் சொத்துக்களினை கையகப்படுத்தல் நிறுத்தப்பட்டமையினாலும் கொவிட் 19 நிலைமை காரணமாக கடமைகளின் மீதான கட்டுப்பாட்டினாலும் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. புதிய கணனிகள் வைரஸ் பாதுகாப்பு செயலிகளுடன் பெறுகை செய்யப்பட்டமையினால் வைரஸ் செயலிகளை பெறுகை செய்வதற்கும் மற்றும் உத்தியோகபூர்வ படிகளின் கொடுப்பனவிற்காக சம்பளம் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையினாலும் | நிதி ஒழுங்கு விதி 50 இன் பிரகாரம், வருடாந்த செலவு மதிப்பீடுகள் தர்க்க ரீதியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணம் தேவைப்படவில்லை. | |
| (ஆ) | 23 விடயங்களுக்கு மொத்தமாக ரூபா 2,120,027,667 மிகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மொத்தமாக ரூபா 317,475,349 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் மொத்தமாக ரூபா 1,802,552,318 தொகை ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒவ்வொரு விடயத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 98 சதவீதமானவை சேமிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் ACA-2(II) படிவத்தின் கீழ் இந்த சேமிப்புக்களுடன் தொடர்புபட்ட விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | நிதி ஒழுங்கு விதி 50 இன் பிரகாரம், வருடாந்த செலவு மதிப்பீடுகள் தர்க்க ரீதியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2. சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 2021 நவம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட 2021/03 ஆம் இலக்க வழிகாட்டியின் பந்தி 7.2 | திணைக்களத்தினால் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட காசு மீதியானது நிதிநிலைமை கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகளின் மீதியில் உள்ளடக்கப்படக்கூடாது. ஆனால், திணைக்களத்தினால் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 1,486,732 காசு மீதியானது நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகளாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட மீதியானது நிதிநிலைமைக் கூற்றில் தவறுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் தொடர்புடைய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.3. வங்கி கணக்குகளை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 வரையிலும், காசோலைகள் வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாதவைகள் ரூபா 71,269,682 ஆகும். வழங்கப்பட்டு ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 263,542 மொத்த பெறுமதியுடைய 12 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதி 396 (ஈ) இன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான காசோலைகளுக்காக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன மற்றும் திகதி நீடிப்பிற்கான கோரிக்கைகளினை சமர்ப்பித்திருந்த நிறுவனங்களுக்கு காசோலைகளுக்கான திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளன மற்றும் சமர்ப்பிக்கப்படாத அவ்வாறான காசோலைகளை ரத்து செய்வதற்கும் அவற்றின் பெறுமதியினை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. நிறைவேற்றப்பட்ட பணிப்பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சரியான நேரத்தில் மற்றும் துல்லியமான தரவுகளினூடாக நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு அதிகமாக வினைத்திறனான பங்களிப்பு செய்வதே திணைக்களத்தின் இலட்சிய நோக்கமாக இருக்கின்றது. மீளாய்வாண்டில் 62 தரவு அறிக்கைகள் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் மற்றும் 23 தரவு | நாட்டில் நிலவிய கொவிட் - 19 தொற்று பரவல் காரணமாக அலுவலகங்கள் மூடப்பட்டமை மற்றும் உத்தியோகத்தர்கள் சுழற்சி முறையில் வேலைக்கு அழைக்கப்பட்டமை போன்ற எங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்கள் காரணமாக அறிக்கைகளினை உரிய திகதியில் வழங்குவதற்கு முடியவில்லை. மேலும், 2021 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தினால் வழங்கப்படும் அனைத்து | தரவுகள் உரிய திகதிக்குள் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கைகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்க வேண்டும். நாட்காட்டியில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், திட்டமிடப்பட்டிருந்த திகதிகளில் எவ்வித அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 01 மாதம் முதல் 11 மாதங்கள் வரை அறிக்கைகளை வழங்குவதில் காலதாமதம் காணப்பட்டது. | வெளியீடுகளையும் தயாரிப்பதற்கான புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் அனைத்து வெளியீடுகளினதும் பக்க அமைப்பு அந்த வழிகாட்டல்களின் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். இதற்காக மேலதிகமான நேரத்தினை செலவு செய்கின்றமை காரணமாக சிறிது காலதாமதம் ஏற்பட்டது. | |
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த வரைவு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 06 பிரிவுகளுடன் தொடர்புடைய 11 இலக்குப்படுத்தப்பட்ட பணிகளில் செயல்முன்னேற்றம் அடையப்பெற்றிருக்கவில்லை. | முன் சோதனை பயிற்சி, கள வேலைக்கான முன் சோதனை, கணனி உதவியுடனான தனிநபர் நேர்காணல் செயன்முறைக்கான முன் சோதனை CAPS நிகழ்ச்சி நிரல் மற்றும் செயல்நுட்ப முறைகளுக்கு தேவையான மேம்படுத்தல்களை மேற்கொள்ளுதல், சனத்தொகை மதிப்பு மற்றும் ஆண்டுக்கான குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் நிரற்படுத்தும் கட்ட பயிற்சியாளர்களுக்கான பயிற்சி என்பன கொவிட் 19 தொற்று பரவல் நிலைமை காரணமாகவும் சனத்தொகை மதிப்பு மற்றும் மக்களியற் பிரிவுக்கு டெப்லட் கணனிகள் கிடைக்கப்பெறாமை காரணமாகவும் நடாத்த முடிந்திருக்கவில்லை.<br><br>திட்டமிட்டதன்படி தேசிய கணக்குகள் பிரிவில் செய்தியாளர் சந்திப்புக்களையும் ஏனைய விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களையும் நடத்த முடிந்திருக்கவில்லை.<br><br>''குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் நிரற்படுத்தும் கட்டம்'' | திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட காலப் பகுதிகளுக்குள் முறையாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆரம்பிக்கப்பட்டிருக்காமையினால், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவின் ‘‘இலத்திரனியல் தொகை மதிப்பு பதிவு’’ (e-census) க்கான ‘‘குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் நிரற்படுத்தும் கட்டத்தினை’’ மேற்கொள்ள இயலாமையாக இருந்தது. ‘‘குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு – 2021 : தொகை மதிப்பின் பின்னரான மதிப்பீடு’’ குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பீட்டின் பின்னர் மேற்கொள்ளப்படும் மதிப்பீடொன்றாக இருக்கின்றது. நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்று பரவல் காரணமாக குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் நிரற்படுத்தும் கட்டத்தனை செயற்படுவதை ஆரம்பிக்காமல் இந்த பணியினை செயற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இல்லை. | |

## 3.2. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தில் 12 பிரிவுகளின் இலக்குபடுத்தப்பட்ட பணிகளினை அடைந்து கொள்வதின் செயல் முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையிலான வீச்சல் உள்ளது. | நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று பரவல் நிலைமை மற்றும் ஏனைய காரணங்களினால் வருடாந்த கட்டுமான துறை கணக்கெடுப்பு – 2020, வருடாந்த வர்த்தகம் மற்றும் சேவை கணக்கெடுப்பு – 2019, வருடாந்த வர்த்தகம் மற்றும் சேவை கணக்கெடுப்பு – 2020, கட்டுமானம், வர்த்தகம் மற்றும் சேவைகள் துறைகள் பிரிவின் வருடாந்த கைத்தொழில் துறைகள் கணக்கெடுப்பு 2020 இன் | திட்டமிட்டதன் பிரகாரம், நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

அறிக்கைகள் முறையே 2022.07.29, 2022.07.29, 2022.12.30 மற்றும் 2022.07.29 அன்று வெளியிடப்படும்.

கைத்தொழில் துறையின் மாதாந்த சுட்டெண்ணினை கணக்கிடுவதற்கான அடிப்படை ஆண்டினை திருத்தம் செய்யும் நோக்கில் தரவுகள் சேமிக்கப்படுகின்றன மற்றும் தேசிய கணக்குகள் பிரிவின் நிகழ்ச்சி திட்டங்களின் செயலாற்றல் 40 சதவீத அளவில் உள்ளது.

வறுமைக்கோட்டின் அடிப்படை ஆண்டினை மாற்றம் செய்வதற்கு அமைச்சுடன் இறுதி தீர்மானத்தினை எட்ட முடியாமை காரணமாக மாதிரி கணக்கெடுப்பு பிரிவின் குடித்தன வருமானம் மற்றும் செலவு கணக்கெடுப்பு அறிக்கை 2019 இன் இறுதி அறிக்கையினை வெளியிட முடியாதிருந்தது.

உலகலாவிய வயது வந்தோர் புகையிலை பயன்பாட்டு கணக்கெடுப்பு (GATS) – 2019/20, தொழிலாளர் புள்ளிவிபரவியல் வல்லுனர்களின் 19 ஆவது சர்வதேச மாநாட்டின் (ICLS) தீர்மானத்தினை செயற்படுத்துவதன் மீதான முன்னோடி ஆய்வு, குடிநீரின் தரம் பற்றிய குடித்தன கணிப்பீடு மற்றும் இணைய பாதுகாப்பு கணக்கெடுப்பு மற்றும் சர்வதேச தொழிலாளர் இடம்பெயர்வு கணக்கெடுப்பின் ஆட்சேர்ப்பு கிரயம் என்பவற்றின் முன்னோடி ஆய்வு என்பவற்றின் அறிக்கையிடல்

நடவடிக்கைகளுக்கான எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றம் அடையப்படவில்லை.

திணைக்களத்தில் 10 பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் திட்டமிடப்படன மற்றும் வெளி நிறுவனங்களின் 05 நிகழ்ச்சி திட்டங்களுக்காக உத்தியோகத்தர்கள் வழிப்படுத்தப்பட்டனர். மற்றும் திணைக்களத்தின் பயிற்சி பிரிவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி திட்டங்களில் ஒரு நிகழ்ச்சி திட்டத்தினை மாத்திரம் நடத்த முடிந்தது.

நிரற்படுத்தும் நடவடிக்கைகளின் தொகை மதிப்பின் பின்னரான கணக்கெடுப்பின் நிறைவுற்ற செயல்முன்னேற்றம் 15 சதவீதம் ஆகும் மற்றும் 4 ஆய்வு கருத்தரங்குகளை நடத்த முடிந்திருக்கவில்லை. பாலின புள்ளிவிபரங்கள் மீதான பிரசுரிப்பினை வெளியீடு செய்வதற்கான நடவடிக்கையினை பூர்த்தி செய்வதற்கு சாத்தியம் காணப்படவில்லை.

தரவுப்பரப்பாக்க அலகின் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தினை அடைந்து கொள்வதன் சதவீதம் 76 சதவீதம் ஆகும். நுண் தரவின் வெளியீட்டு கொள்கையினை நாளதுவரையாக்கல் செய்வதற்கான வெளியீட்டு மட்டத்தினை அடைந்து கொள்வதன் சதவீதம் 85 சதவீதம் ஆகும்.

**3.3. சொத்து முகாமைத்துவம்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் கம்பனியொன்றிடமிருந்து 2014 திசெம்பர் 29 ஆந் திகதியன்று ரூபா 16,320,304 தொகைக்கு 10 KVA உடைய 06 இயந்திரங்கள், 20 KVA உடைய 06 இயந்திரங்கள், 30 KVA உடைய 05 இயந்திரங்கள் மற்றும் , 40 KVA உடைய இயந்திரமொன்று உள்ளடங்கலாக 18 இயந்திரங்கள் பெறுகை செய்யப்பட்டிருந்தன. இயந்திரங்களின் பௌதீக பரிசீலனையின் போது 15 KVA உடைய இயந்திரமொன்று 2014 திசெம்பர் 29 ஆந் திகதியன்று பெறுகை செய்யப்பட்ட திகதி முதல் 07 ஆவது மாடியின் மேற்குப் பகுதியில் உபயோகமற்றதாக காணப்பட்டது. | கட்டிடத்தின் குழுவினால் கட்டிடத்தின் 07 வது மற்றும் 08 ஆவது மாடிகள் நிதி அமைச்சுக்க ஒதுக்கப்பட்டமை காரணமாக அமைச்சின் தேவைப்பாட்டின் பிரகாரம், மாடிகளில் இலத்திரனியல் மின் அடைப்பான் (Plug) பொருத்தப்பட்டிருக்கவில்லை. நிதி அமைச்சின் நோக்கெல்லையில் அவ்வவ்போது ஏற்படும் மாற்றங்கள் காரணமாக அமைச்சுக்கு கட்டிடத்தினை வந்து பார்வையிட வேண்டிய அவசியம் இல்லை. இதன் காரணமாக 07 ஆவது மாடியின் வலது பக்கத்திலுள்ள UPS இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை. அந்த இயந்திரம் இன்னும் பயன்படுத்தகூடிய நிலைமையில் காணப்படுகின்றது என்பதனை நான் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>தொகை மதிப்பினை மேற்கொள்கின்ற நேரத்தில் தொகை மதிப்பு மெற்கொள்ளப்படும் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் மெற்கொள்ளப்படும் ICT பிரிவின் பயன்பாட்டிற்காக 7 வது மாடியின் வலது பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேல் மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து விலைகள் கோரப்பட்டுள்ளன மற்றும் UPS இயந்திரத்தினை | பெறுகை செய்யப்பட்ட சொத்துக்கள் உச்ச திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்படுத்துவதுடன் தொடர்புபட்ட இலத்திரனியல் மின் அடைப்பான்களை (Plug) பொருத்துவதற்கான பெறுகைக்கான அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அரச நிதி திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட வழிகாட்டி இலக்கம் 03 இன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டிலிருந்து பாவனையிலிருந்து நீக்கப்பட்டிருந்த 04 வாகனங்கள் அகற்றல் செய்யப்படல் வேண்டும். ஆனால், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அது மெற்கொள்ளப்படவில்லை. | 04 வாகனங்களும் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருந்தன. 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் இந்த வாகனங்களை அகற்றல் செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. சில அமைச்சுக்களின் வாகனங்களின் பற்றாக்குறையினை கருத்திற்கொண்டு இந்த வாகனங்களை பரிசீலனை செய்வதற்கு உத்தியோகத்தர்களும் வருகை தந்ததுடன் அவற்றினை அவர்களுக்கு வழங்கும்படி கோரிக்கை விடுத்தனர். ஆனால், அந்த அமைச்சுக்கள் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு உடன்படவில்லை மற்றும் வாகனங்கள் தொடர்பில் 2021 மே 05 ஆந் திகதியன்று கொம்ப்ரோலர் தலைமை அதிபதிக்கு அறிக்கையொன்று அளிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் தபால் கடமைகள் நோக்கத்திற்காக மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கப்படல் வேண்டும் மற்றும் ஏனைய வாகனங்கள் முறையான முறையில் அகற்றல் செய்யப்படல் வேண்டும். | அரச நிதி திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட வழிகாட்டி இல 03 இன் பிரகாரம், அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | நிதி ஒழுங்கு விதி 1647 (ஆ) இன் பிரகாரம், வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பில் முழுமையான கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் இருப்பு கணக்கெடுப்புடன் இணைந்ததாக வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் கணக்கெடுப்பொன்றினை மேற்கொள்வதற்கு | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம், நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆனால், 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான அவ்வாறான எவ்வித கணக்கெடுப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ளது மற்றும் கணக்கெடுப்பின் பின்னர் தொடர்புடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். | |
| (ஈ) | உத்தியோகபூர்வ வாகனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள சாரதிகளின் இணைந்த மற்றும் மேலதிக நேர படிகளின் கொடுப்பனவுடன் தொடர்புபட்ட தகவல்கள் 2008 யூன் 26 ஆம் திகதியிடப்பட்ட 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியிலுள்ள இணைப்பு I இல் உள்ள முறையில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் 08 உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு அவ்வாறு செய்யப்படவில்லை. | பொருத்தமான படிவங்கள் தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | 2008 யூன் 26 ஆம் திகதியிடப்பட்ட 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2016 திசெம்பர் 29 அம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம், வாகனத்தின் எரிபொருள் பரீட்சிப்பு திகதியிலிருந்து பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் முந்தைய மாதத்தில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவினை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் வாகனங்களின் பதிவுகள் பேணப்படல் வேண்டும். ஆனால் திணைக்களத்தில் வாகங்களின் பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | அண்மையில் நாட்டில் ஏற்பட்டுள்ள தொற்று நோய் பரவல் காரணமாகவும் வீட்டிலிருந்து வேலை செய்யும் விதிகள் பலமுறை செயற்படுத்தப்பட்டமையினாலும் மற்றும் அரச செலவுகளை கட்டுப்படுத்துவதன் காரணமாகவும் எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்ள முடியவில்லை. தற்போதைய நிலைமை சாதகமாக இருக்கின்ற போது தலைமை அலுவலகத்திலுள்ள வாகனங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களில் காணப்படும் வாகனங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களில் காணப்படும் வாகனங்களுக்கான எரிபொருள் பரீட்சிப்பொன்றினை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | 2016 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிதி ஒழுங்கு விதிகள் 1647 (இ) இன் பிரகாரம், ஒரு இடத்தில் மூன்று அல்லது அதற்கு அதிகமான வாகனங்கள் காணப்படுகின்ற போது சம்பவ குறிப்பேட்டு புத்தகத்தில் பதிவு செய்யப்படாத மற்றும் நீடித்த பயன்பாடற்ற பெறுகை செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்ட அனைத்து பொருட்களினையும் உள்ளடங்கும் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். ஆனால் போக்குவரத்து பிரிவில் அவ்வாறானதொரு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் நுகர்வு பொருட்களின் பதிவேடொன்று பேணப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 2016 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம், 24 வாகனங்களின் சம்பவ குறிப்பு புத்தகத்தின் பிரகாரம், எரிபொருள் பரீட்சிப்பு ஒரு போதும் மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 08 வாகனங்களுக்கு 2003 ஆம் ஆண்டிலும் மற்றும் ஏனைய வாகனத்திற்கு 2004 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அண்மையில் நாட்டில் ஏற்பட்டுள்ள தொற்று நோய் பரவல் காணமாகவும் வீட்டிலிருந்து வேலை செய்யும் விதிகள் பலமுறை செயற்படுத்தப்பட்டமையினாலும் மற்றும் அரச செலவுகளை கட்டுப்படுத்துவதன் காரணமாகவும் எரிபொருள் பரிட்சிப்பினை மேற்கொள்ள முடியவில்லை. தற்போதைய எரிபொருள் பெறுவதில் உள்ள சிரமம் முடிவடைந்த பின்னர் தலைமை அலுவலகத்திலுள்ள வாகனங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களில் காணப்படும் வாகனங்களுக்கான எரிபொருள் பரீட்சிப்பொன்றினை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2016 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.4. அரச உத்தியோகத்தர்களின் பிணை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி ஒழுங்கு விதி 880 இன் பிரகாரம், காசோலைகளில் கையொப்பம் இடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அரச நிதி திணைக்களத்தின் ஊடாக பாதுகாக்கப்படுகின்றார். உத்தரவாதத்தினை வைப்பு செய்வதற்கான விண்ணப்ப படிவம் பிரதான கணக்காளரினால் மின்சக்தி அமைச்சினூடாக உத்தரவாத சங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம்) பிணையினை வைப்பு செய்து தேசிய சேமிப்பு வங்கியின் (தங்காலை கிளை) புத்தகத்தினை சமர்ப்பித்துள்ளார். ஏனைய உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. ஆளணி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 428 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் 25 சதவீதம் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் காணப்பட்டனர். வெற்றிடங்களில் 151 பதவிகள் அல்லது 35 சதவீதம் இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் ஆவார்கள். | திணைக்களத்தின் கடமைகளை பூர்த்தி செய்வதற்கு வெற்றிடங்களினை நிரப்புவது அவசியமாகும். எனவே, வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இந்த பதவிகளின் வெற்றிடங்களால் திணைக்களத்தின் செயற்றிறன் பாதகமாக பாதிக்கப்படுமாயின், பதவிகள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும். |